1973 பிப்ரவரி 10]

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: தலைவர் அவர்களே, நாம் நஷ்ட ஈடாக டி.வி.எஸ்.-க்கு கொடுக்கவேண்டியது 124.5 லட்சம் ஆகும். அதிலே கிராஜியுட்டி என்ற வகையிலே 30 லட்சமும் தொழிலாளர்களுக்கு லீவ் என்ற வகையிலே மூன்று லட்சமும் ஆக முப்பத்திமூன்று லட்சம் போக 91.5 லட்சம் நஷ்ட ஈடு என்ற வகையிலே கொடுக்கிறோம். பாண்டியன் போக்கு வரத்துக் கழகம் பஸ்களை எடுத்ததற்குப் பின்னால் அவர்கள் சம்பாதித்த தொகையிலிருந்து 20 லட்சம் ரூபாய் நாம் கொடுத்திருக்கிறோம்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: வினுக்கள்-விடைகள் முடிவுற்றன.

(குறிப்பு.—ஓர் உரையின் தொடக்கத்தில் வெள்ளிக்குறி (*) இடப் பட்டிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பட்டது என்பதைக் குறிக்கும்.)

2. ஒத்திவைப்புத் தீர்மானங்கள்.

(அ) மதுரையில் மாணவர்—பேருந்துத் தொழிலாளர் மோதலும் அதன் விளைவாக ஏற்பட்டுள்ள தொழிலாளர் வேலை நிறுத்தமும் குறித்து

MR. DEPUTY SPEAKER: The hon. Member, Thiru K. T. K. Thangamani has given notice under rule 42 of the Assembly Rules to discuss the serious situation arising out of the clash between the students and the bus workers in Madurai and the consequent strike of the workers in 120 buses continuing.

திரு. கே. டி. கே. தங்கமணி: மிஸ்டர் டெபுடி ஸ்பீக்கர் சார், இன்று கேள்வி நேரத்திலே கூட அமைச்சர் அவர்கள், டி.வி.எஸ். பஸ்கள் எடுத்து நடத்து வதன் மூலம் போக்குவரத்து அங்கே சிறப்பாக நடப்பதாகவும், லாபமாக நடக்கிற நிலையில் இருப்பதாகவும் சொன்னார்கள்.

சென்னையிலே மாணவர்களுக்கும் பஸ் தொழிலாளர்களுக்கும் ஏற்பட்ட நிலைமாதிரியல்ல மதுரையிலே. அங்கே பி.ஆர்.சி. தொழிலாளர்களுக்கும் மாணவர்களுக்கும் அப்படிப்பட்ட நிலைமை இல்லை. ஒரு பிரச்னை ஏற்பட்டு 24 மணி நேரத்திலே தீர்க்கப்பட்டது. நல்ல முறையில் லாபகரமான முறையில் ஓடக்கூடிய பஸ் தொழிலிலே ஒரு சம்பவம் ஏற்பட்டு அதைத் தீர்ப்பதற்காக மதுரை நகரத்திலே உள்ளவர்கள் எல்லாம் சேர்ந்து மாணவர்களுக்கும் பஸ் தொழிலாளர்களுக்கும் இடையே எந்தவிதமான தகராறும் கூடாது என்று சொல்லியிருக்கிறார்கள். அப்படி செட்டில்மெண்ட் ஆகியிருக்கிற நேரத்திலே, 355 பஸ்களிலே 120 பஸ்களுடைய தொழிலாளர்கள் ஸ்ட்ரைக் செய்திருக்கி றார்கள். அதைப்பற்றிப் பேசி தீர்த்துவைப்பதற்கு கலெக்டர் அவர்கள்

முயற்சி எடுக்கிறார்கள் என்று சொன்னார்கள். இருந்தாலும் அங்கே நடவடிக்கை எடுக்க வேண்டியவர்கள் நடவடிக்கை எடுக்காத காரணத்தினாலும் நிலைமை மோசமாக இருக்கிறது. இதைப்பற்றி விவாதிக்க வேண்டுமென்று தீர்மானம் கொடுத்திருக்கிறோம். இது மிகவும் முக்கியமான பிரச்னையாக இருப்பதால் இந்த அவையை ஒற்றிவைத்து விவாதித்தால் நலமாக இருக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: தலைவரவர்களே, மதுரை மாநகரத்தில் பேருந்து தொழிலாளர்களுக்கும் மாணவர்களுக்கும் ஏற்பட்ட தகராறு முற்றிவிடக்கூடிய நிலையில் மாவட்ட ஆட்சித் தலைவரவர்கள் தலையிட்டு உடனடியாக மாணவர் பிரதிநிதிகளையும், தொழிலாளர்களின் பிரதிநிதிகளையும் அழைத்துப் பேசி, 8-ஆம் தேதியன்று ஒரு சமரச முடிவை ஏற்படுத்தினார்கள். அந்த சமரச முடிவிற்குப்பிறகு நேற்று, 9-ஆம் தேதி காலையில் 10 மணியளவில் மீண்டும் ஒரு இடத்திலே பஸ் தொழிலாளர்களுக்கும் மாணவர்களுக்கும் மோதல் ஏற்பட்டது. அதற்குப் பிறகும் மாவட்ட ஆட்சித் தலைவரவர்களும், போக்குவரத்துத் துறையிலே பணியாற்றுகின்ற மானேஜிங் டைரக்டரும், மற்ற அதிகாரிகளும் தலையிட்டு இருவரிடையேயும் ஒரு சமரசத்தை உருவாக்கியிருக்கிறார்கள். இன்று மீண்டும் பேருந்துகள் ஓடத் தொடங்கியிருக்கின்றன என்றும், மாரியம்மன்—தெப்பகுளம் சாலையிலும், நாகமலை—புதுக்கோட்டை சாலையிலும் தவிர மற்றச் சாலைகளில் போக்கு வரத்து சுமுகமாக நடந்து கொண்டிருக்கிறது என்ற தகவல் கிடைத்திருக்கிறது.

அரசு இதிலே போதிய அக்கறை செலுத்தவில்லை என்று திரு. கே.டி.கே. தங்கமணி அவர்கள் சொன்னார்கள். ஒரு ஒற்றிவைப்புத் தீர்மானத்தைக் கொடுத்துவிட்டு அதைக்கூடச் சொல்லாவிட்டால் ஒற்றிவைத்து விவாதிப்பதற்கு அடிப்படைக் காரணம் இல்லாமல் போய்விடும் என்ற காரணத்தினால் சொல்லியிருப்பார்கள் என்று கருதுகிறேன். முதலிலே இப்படியொரு நிகழ்ச்சி நடைபெற்றது என்றவுடனேயே நான் மாவட்ட ஆட்சித் தலைவருடன் பலமுறை தொடர்பு கொண்டேன். போக்குவரத்துத் துறை அமைச்சரவர்களும் அதிகாரிகளோடு தொடர்புகொண்டு பேசியிருக்கிறார்கள். மாவட்ட ஆட்சித் தலைவரவர்கள் அரசின் சார்பில் எடுத்த நல்ல முயற்சியின் காரணமாகவும், அவர்களுடைய ஏற்பாட்டினால் அங்கே நிறுவப்பட்ட அமைதி பரிபாலிக்கப்படுகின்ற குழுவின் பணியின் காரணமாகவும் அங்கே இப்பொழுது ஒரு சமரசம் ஏற்பட்டிருக்கிறது.